Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300] of 1953.

விரோதிஞூ (188°) ஆவணி மீ 28உ ஆரம்பமான க.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருது ஞூ ஆடிமீ களஉ வெள்ளிக்கிழமை (2 August. 1963) [இல-கஅ

# 'நாமுண்டு நம் தொழிலுண்டு'

## என்ற கொள்கை நாசத்திற்கு வழியாகும்

### சைவப் புலவர்சங்கத் தலைவர் உரை

சைவப்புலவர்களே! சைவப் பெருமக்களே! சைவச்சான்றோர் பேரவை இன்று மூன்ருவது நேரமாகக் கூடுகின்றது, சென்ற இரு நேர நிகழ்ச்சிகளும் இறையருளோடு இனிதே நிறைவெய்தியமை குறிப்பிடத்தக்கது. இன்று ஈழத்தின் பொன்னுளாகும். சைவசமய சரித்திர வரலாற்றிலே இந்நாளைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது என்று நினைக்க அகம் மிக மகிழ்கின்றது.

சைவ கலாச்சார வளர்ச்சிக்கு அயராது உழைத்து வரும் சைவப்பெரியார் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் இப்பேரவையில் அமர்ந்திருக்கின்ருர்கள். இன்று அன்னுரின் திருக்கரங்கள் சைவப் புலவர்களுக்குப் பட்டமளிக்கப்போகின்றன. ஈழத்தில் சைவப் பட்டமளிப்பு இன்றே ஆரம்பமாகின்றது தொடர்ந்து சர்வகலாசாலைப் பட்டங்களை —சைவப்பட்டங்களை அன்னுர் வழங்க இறையருள் கூட்டிவைத்திருக்கின்றது. என்னில் ஈழத்துச் சைவர்கள் பெருமிதம் கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

புதுப்பிக்கப்பட்ட விரிவான பாடத் திட்டத்தில் இப்பொழுது பரீட்சிக்கப்படுகின்ருர்கள் சைவப்புலவர்கள். அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்தின் சிபாரிசோடு சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜம் விரிவான பாடததிட்டததைத் தயாரித்துச் சைவத் தேர்வினைச் சென்ற ஆண்டு தொடக்கம் நடத்தி வருகின்றது. சென்ற ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றினேர் தொகையை இந்த ஆண்டுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவோர் தொகை விஞ்சிவிட்டது. சைவாசிரியர்கள் பலர் இத்தேர்வில் கலந்து கொள்கின்றனர்- தமிழையும் சைவத்தினையும் தனித்தனி படிக்காது ஒன்ருகவே படித்துப் புலமை அடைவது சாலச் சிறந்தது. அதனைக் குறிக்கோளாக வைத்துப் பாடவிதானம் இலக்கண இலக்கிய சாஸ்திர பாடங்களையும் சமய வரலாற்றுப் பாடங்களையும் கொண்டு மூன்று தேர்வுகள் அமைத்துப் பரீட்சை நடைபெறுகின்றது. தமிழ்ப் பண்டிதர் வித்துவான்களை இவர்கள் தரத்தோடு ஒப்பிடில் சமயசாஸ்திர பாடங்களில் கூடுதலான அறிவைச் சைவப்புலவர்கள் பெற்றிருக்கிருர்கள் என்றே கூறலாம். இவர்களின் அந்தஸ்தினைக் கல்விப்பகுதியார் சீர்தூக்கி மதிக்கச் செய்வது சைவ மாண்புடைய சைவப் பெரியார்கள் கடனாகும். மேற்சபை அங்கத்தவர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் சைவப்புலவர்கள் சம்பள உயர்வுபற்றிமேற்சபையிலும் பாராளுமன்றத்திலும் பிரேரணைகள் பேச்சுகள் கொண்டுவர ஆவன செய்தல் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனை முன்னோடியாக வைத்து அவர்கள் செயற்பட்டால் அன்னுர் மேற்கொள்ளும் திட்டத்துக்கும் வாய்ப்பாக அமைவதாகும்.

சைவச் சேவையையும் சைவப் புலமைகளையும் உணர்ந்து ஆவன செய்ய வேண்டியவர்கள் சைவப் புலவர்கள் ஆவர். 'நாமுண்டு நம்பாடுண்டு' என்று இருந்தால் சமூகம் பாழாகிவிடும். மற்றவர்களின் நல்ல கருத்தையும் வரவேற்று, தங்களின் நல்ல கருத்தோடு சேர்த்து சைவ உலகினிற்குப் பரிமாற வேண்டியவர்களும் சைவப் புலவர்களேயாம், நால்வர் கருத்தை ஏற்று நாம் நடக்க

தொடர்ச்சி 4ம் பக்கம்

### நற் சிந்தனை

—:—

ஏக னனேக னிறைவனடி
வாழ்கவெனும்
மோக மறுக்குமொழி
கண்டுய்வ தெக்காலம்

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயேயென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்ற நில்லே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனுர் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்ருேம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்.

## நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலில்

நல்லூர்த்திருவிழா வைபவங்களைமுன்னிட்டு அமைக்கப் பெற்றுள்ள நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலில் "பட்டினத்தாரும் பத்தமூவரும்" என்ற தலைப்பில திரு அளவையூர் சஞ்சீவி அவர்கள் கடந்த இரவு தொடக்கம் 19-8-63தீர்த்தத் திருவிழா நாள் வரைக்கும் இரவுதோறும்பக்கவாத்திய சகித சங்கீத கதாப்பிரசங்கம் செய்ய ஏற்பாடாகியுள்ளது. ——

# புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளையவர்களுக்குப் பொன்னுடை

## 'இந்துசாதனம்' ஆசிரியருக்குச் சைவபூஷணப் பட்டம்

### சைவப் புலவர் பட்டதாரிகள் சங்க மாநாட்டில் வழங்கப்பெற்றன

ஈழத்திலும் தென்னிந்தியாவிலும் சைவமும் தமிழும் நன்கு பயின்று பண்ணுடன் திருமுறைகள் ஓதவும் திருத்தொண்டர்களைப்பற்றிக் கதாப்பிரசங்கம் செய்யவும் ஆற்றலும் அறிவும் பெரிதும் பெற்ற திரு த குமாரசுவாமிப்பிள்ளை அவர்களுக்குப் பொன்னுடை போர்த்து அவர்களின் சைவப் பணிக்கு நன்றிபாராட்டச் சைவப்புலவர்கள் சங்கம் ஒழுங்கு செய்தது பொருத்தமானது,

புலவர் குமாரசுவாமிப் பிள்ளையின் சைவப் பணியை நான் நன்கறிவேன். சைவ சங்கங்களும் அறிந்திருக்கின்றன. எனவே அப்பெரியாரைப் பாராட்டிப் பொன்னுடை போர்ப்பது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. சைவ உலகமும் இந்த நிகழ்ச்சியை வரவேற்கும் என்பதற் கையமின்று என்று சைவ பரிபாலன சபைக் தலைவர் [illegible] ரிய நியாயவாதி [illegible] முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள்கூறிச் சென்ற ஞாயிற்றுக்கிழமை நாவலர் வித்தியாசாலையில் நடந்த சைவப் புலவர் மகாநாட்டில் புலவர் த. குமாரசாமிப் பிள்ளை அவர்களுக்குப் பொன்னுடைபோர்த்தனர்.

இளமைதொட்டுச் சைவப் பணியாற்றுவதிலும் மொழித் தொண்டு புரிவதிலும் கனிமுயன்று வந்திருக்கும் திரு. நம. சிவப்பிரகாசம் பரமேசுவர மகாவித்தியாலயத்தில் [illegible] கராக இருந்தவர். சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களின் மாணாக்கராகவும் அவரின் சைவாபிமானத்தைத் தானும் உணர்ந்து அதில் ஈடுபடும் எண்ணம் கொண்டவராகவும் இருந்தனர். வழக்கறிஞராகக் கடமையாற்றிக் கொண்டு பொதுநல சேவையிலும் சைவத்துக்கும் தமிழுக்கும் பணியாற்றுவதிலும் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகின்றனர். நாவலர் அவர்கள் நன்னெறியைக் கைப்பிடித்து சைவப்பிரசாரம் செய்வதிலும் அவர் பெரிதும் ஈடுபடுகின்றதை யாவரும் நன்கறிவர். சைவ பரிபாலனசபையார் நடத்தி வரும் இந்துசாதன ஆங்கில தமிழ் வெளியீடுகள் இரண்டுக்கும் பல ஆண்டுகளாகப் பத்திரிகாசிரியராக அமர்ந்து சைவப்பணியும் தமிழ்த்தொண்டும் செவ்வனே செய்துவருகின்ற திரு, நம. சிவப்பிரகாசம் அவர்கள் உண்மையில் ஒரு சைவபூஷணமே. எனவே அவருக்கு இப்பட்டத்தைச் சைவப்புலவர் சங்கம் அளிப்பது நல் அமைவேயாகும் என்று ஆசியுரைத்து, முன் பாராளுமன்றத்து அங்கத்தவராகவும், அமைச்சராகவும் இருந்தவரும், இப்பொழுது மேற்சபை அங்கத்தவராகவுள்ளவருமாய சைவப்பெரியார் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் இந்துசாதன ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களுக்கு 'சைவ பூஷணம்' என்ற பட்டத்தைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் அளித்த பத்திரத்தை வழங்கினர்.

### சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை

தெல்லிப்பழை — பாலர் ஞானேதய சபையினரால் ஷ குருபூசை, காசிவிநாயகராலய மண்டபத்தில் 28-7-63 ஞாயிற்றுக்கிழமை மாலை தெல்லிப்பழை பாலர்ஞானேதயசபை மாணவர்களால் மேற்படி சபைத்தலைவர் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

பிற்பகல் 4 மணியளவில் ஸ்ரீ காசிவிநாயகப் பெருமானுக்கும், சுந்தரமூர்த்திசுவாமிகளின் திருவுருவப்படத்திற்கும் விசேட பூசைகள் நடைபெறறன. $4\frac{1}{2}$ மணியளவில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றதும் கூட்டம் ஆரம்பமாயது. தலைமையுரையில் சுந்தரரின் தெய்வீகத்திறனைத் தலைவர் எடுத்துரைத்தார்.

மாணவ மாணவிகளது உபந்நியாசங்களும் தேவாரப் பாடல்களும் நடைபெற்ற பின். சைவப்புலவர் சங்கத்தின் திருவாசகப்போட்டிச் சான்றிதழ்கள் தலைவரால் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஆடி மீ
கஉ வெள்ளிக்கிழமை

## ஒலிபெருக்கி ஒத்துழைக்கமாட்டாதா ...?

இக்காலத்தை ஒலிபெருக்கியுகம் என்றுரைத்தால் அவ்வுரை வழுவாகாது. மங்கலவாத்தியமும் மலர்மாலையும் இல்லாவிட்டாலும் ஒலிபெருக்கியும் நிழற்படமமைக்கும் கருவியும் இருந்தாற் போதும் என்ற முறையிலே மாபெருங் கூட்டங்களும் சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி விழா நடக்கும்பொழுது ஒலிபெருக்கியின் உதவி வேண்டும் என்பதுண்மையே சொற் பெருக்கை ஒலிபெருக்குவதற்கன்றி இடை நேரத்தில் மக்களை ஊக்கஞ் செய்வதற்குப் பாட்டுக்கள் இக்கருவிமூலம் பாடப்பெறுவது வழக்கம். மணப்பந்தலிலே "வாழ்வாவது மாயம்" என்ற பாட்டும் ஆசிகூறும் நிகழ்ச்சியிலே ஏசியுரையாடும் நாடகமும் வழங்கிப் பொருத்தமற்ற, இல்லை மனவருத்தமுறச் செய்யும்படி, ஒலிபெருக்கி இயங்குவதானல் மனிதகுலம் சிந்தனையற்றதாய்விட்டதென்றே கூற வேண்டியிருக்கிறது.

அது ஒருபுறம் இருக்க சைவமாநாட்கள் அடிக்கடி நடக்கின்றன. கோயில்களிலே திருவிழாக்காலங்களிற் சைவப்பிரசாரங்கள் நிகழ்கின்றன. இவற்றுக்கெல்லாம் ஒலிபெருக்கி வேண்டும். ஆனால் காலம் இடம் அறிந்து புனித புண்ணிய நிகழ்ச்சிகள நடைபெறும்பொழுது திருமுறைகளை மட்டும் ஒலிபெருக்கியிற் பாடும் இசைத்தட்டுகளைப் பயன்பெறச் செய்வாரில்லையே. போதிய திருமுறைப் பாட்டுத்தட்டுகள் இல்லையா? இருக்கின்றவற்றையும் பயன்படுத்த விருப்பமில்லையா?

சைவ நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்கின்றவர்கள் சைவச்சால்புக்கமைய அவற்றை நிகழ்த்துவது வேண்டப்படுகின்றது. சைவக்கல்வி வேண்டும். சைவப்புலமை வேண்டும் சைவச்சால்பு வேண்டும் என்று இரவுபகலாக எப்பொழுதும் எவ்விடத்தும் இயம்பியவண்ணம் இருக்கின்றோம். பண்ணுடன் திருமுறைகளை மக்கள் கேட்டின்புறச் செய்வதற்கும், சைவக்கூட்டங்களைத் தக்கவாறு நடத்துவதற்கும் அறிகின்றோம் இல்லையே.

# "பண்டிதர்களையும் வித்துவான்களையும் தோண்ட பள்ளி முதல்வர்"

## வித்துவான் சுப்பையபிள்ளைக்குப் பாராட்டு

### சைவபரிபாலன சபை பொன்னாடை போர்த்தது

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் தமது இளமைக்காலத்தில் இந்த வித்தியாசாலை அமைப்பதிலும், சமயம், இலக்கணம், சமஸ்கிருத வகுப்புகளை நடாத்துவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். முதல் முதல் இந்த வித்தியாசாலையில் தலைமையாசிரியராக காசிவாசி செந்திநாதஐயர் கடமையாற்றினர். இவரை வேதாகமமூர்த்தி என்றே சொல்லவேண்டும். ஆகமம் திருமுறை, சைவசித்தாந்தம் ஆகியவற்றுக்கு வேறுபாடுகாணமல் வேதாந்த சித்தாந்த ஒற்றுமைப்பாடு கண்டவர்.

விவேகானந்தர் அமெரிக்காவில் சர்வதேச மதப் பேரவையில் வேதாந்தம் பேசி சென்னைக்கு வந்த பொழுது "திரு நல்லைச் சாமி அவர்களின் தலைமையில், பாராட்டுக்கூட்டமொன்றில் சைவ சித்தாந்தக் கொள்கையை இவர் விவேகானநதருக்குக் கூறினர்.

அடுத்து வித்துவசிரோமணி பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் தலைமையாசிரியராக இப்பாடசாலைக்கு இருந்தார். இவர் வீதி, தெரு, திண்ணை முதலிய இடங்களில் கல்வி முழக்கம் செய்தார். 1922ம் ஆண்டு சுன்னுகம் குமாரசாமிப்புலவர் அவர்கள் தலைமையாசிரியராகக் கடமையாற்றினர். புலவரவர்களின் அந்தியக்கிரிகையில் நாவலர் தமையனர் மகன் வாய்க்கு அரிசியிடும் பொழுது தமிழுக்கு வாய்க் கரிசி இடுகிறேன் என்று கலங்கிக்கூறினர்.

இவரிடம் இருந்து கல்வி கற்றவர் பதினெண்மர். கடைசியில் மிஞ்சியவன் நான் பண்டிதர் மயில்வாகனம் (விபுலானந்தர்).

இந்த வித்தியாசாலை பண்டிதர்களையும் அறிஞர்களையும் கொண்டு இயங்கி வந்திருக்கிறது. இன்றுபாராட்டப்பட்டுப் பொற்கிழி வழங்கப்படும்இப்பாடசாலை முன்னள் தலைமையாசிரியர் வித்துவான் திரு சுப்பையபிள்ளையும் அந்த வழியில் வந்தவர். வடமொழியறிவும் தென்மொழிப் புலமையும் நிரம்பப்பெற்றகல்விமான்" என பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அர்கள் வித்துவான் ந சுப்பையபிள்ளை அவர்களின் சேவைநலம் பாராட்டிப் பொற்கிழி அழித்த விழாவில் பேசினர்.

வடபகுதி வித்தியாதிகாரி சி. உ. சோமசேகரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழாவில் பொன். முத்துக்குமாரன், வித்துவசிரோன்மணி சீதாராம சாஸ்திரிகள் ஆகியோர் பாராட்டிப் பேசினர்கள். நாவலர் பாடசாலை ஆசிரிய மாணவர்கள் பாடியளித்த பாராட்டுப்பத்திரமும் வித்துவான் சுப்பையாபிள்ளை அவர்களுக்கு வாசித்தளிக்கப்பெற்றது.

யாழ் — சைவபரிபாலன சபைத்தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் சைவபரிபாலனசபை சார்பாக பொன்னடை போர்த்துக் கௌரவித்தார். பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்கள் நன்றிதெரிவித்துப் பேசினர். ——

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அகில இலங்கைச்
சைவப் புலவர் சங்கம்

## கௌரவப் பட்டமளிப்பு சைவ பூஷணம்

திருநெறிய தீஞ்சொற் றமி
ழோதுஞ் சைவ
வொருநெறியர் வாழ்வ ருயர்ந்து

சைவ நன்மக்கள் சிவனருள் வழிபட்ட சான்றோர் ஆசி பெற்றும், சித்தாந்தச் செந்நெறி தலைப்பட்டும் சிவ நிதியாம் பேரின்பப் பேறெய்த வேண்டுமென்றுன்னி, அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கம்,

இறையருள் கொண்டு
ஈண்டுக் குழுமிய
சைவச் சான்றோர்
திருமுன்னிலையில்

திருவாளர்
நம சிவப்பிரகாசம் அவர்களுக்கு
"சைவ பூஷணம்"

என்னும் கௌரவப்பட்டம் எழில்பெற நல்கி, அன்னர் இறையருள் பேணலும் அவனடி பூணலும் அடியாரைப் போற்றலும் அவர் அவர் பணியாற்றலும் புரிந்தே பொய்யில புகழும் பொறையும் நிறையும் பொச்சாப் பின்மையும் அறிவும் உருவும் ஆற்றலும் திருவும் சொற்பொருளுணர்த்தும் சொல் வளப்பேறும் இன்ன பிறவும் மன்னி நாளும் இன்புற்றுயர்கென வாழ்த்தா நின்றதுவே.

ச. சச்சிதானந்தன்
காரியதரிசி,

வ. செல்லையா
தலைவர்.

28-7-63ல் நடைபெற்ற மகாநாட்டில் இது வழங்கப்பட்டது.

## பாதயாத்திரைத் திருக்கூட்டம்

திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் நல்லூர்க்கந்தசுவாமிகோவிலில் இருந்து நேற்று வியாழக்கிழமை 8-வது ஆண்டாக ஆரம்பித்துப் பூநகரிப் பாதை வழியாகச் சென்று கொண்டிருக்கும் பாதயாத்திரைப் பக்தர் திருக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கேதீச்சரத்தைச் சென்றடையும்.

மறுதினம் திங்கட்கிழமை காலை நடைபெறும் திருஞானசம்பந்த சுவாமிகள் விசேட ஆராதனையில் இவர்கள் பங்குபற்றுவர்.

## மட்டுநகரில் மாபெரும் தமிழ்விழா

மட்டுநகரில் எதிர் வரும் 23ம், 24ம், 25ம் திகதிகளில் தமிழ்விழா நடைபெற இருக்கிறது. இவ்விழாவை இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் ஆதரவுடன் கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கம் நடாத்துகிருர்கள். மூன்று நாட்கள் நடைபெறும் இந்தப் பெரும் தமிழ் விழாவில் கருத்தரங்கங்கள், கவியரங்கங்கள், சொற்பொழிவுகள் இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள் ஆதியன இடம் பெறும். ——

## உண்மை விளக்கம் வெளியீடு

சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்தினர் சென்ற சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடாத்திய மகாநாட்டில் முதலாவது தினம் சைவப் புலவர் சித்தாந்த பண்டிதர் திரு சி செல்லத்துரை அவர்களால் உரை எழுதப்பட்டதும் திருவதிகை மனவாசகங்கடந்தாரால் அருளிச் செய்யப்பெற்றதுமான உண்மை விளக்கம் மூலமும் உரையும் நூல் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்களால் வெளியிடப்பெற்றது. ஸ்ரீ சீதாராமசாஸ்திரிகளால் முதல்பிரதி வாங்கி வைக்கப்பெற்றது.

## ஒளிதருகாவடி கலையுடனுட!

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம் வசந்தா: :: தாளம்: ஆதி

பல்லவி

வே லா சிவ பா—லா—சண்முக
வே தா நலம் பெறு—நா தா முருக (வே)
நீ லாம் பிகைமடி—மே லானந்த
தா லாட் டுவந்திடும்—சீ லா கந்த (வே)

சரணம் (மத்திம காலம்)

ஓம்முருகாவென அடியவர் பாட
ஒளிதரு காவடி கலையுட னுட
உத்தம மாலைய கத்தியர் சூட
உமைசிவ னுடனரு ணகிரியுங்கூட
தாம்தரித ஜுணு தகிட தகிடதிமி
தத்த காரநட னத்து மாமயிலில்
தண்ணருள் [illegible]
தமியேன் மனதினில்வருவாய் குகனே.
(வே)

நல்லைக்கீர்த்தனம் — 41.

## முத்தையா உன்மேல் பித்தையா!

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம்: ஆபேரி : தாளம்: ஆதி

பல்லவி

முத்தையா எனக்குன்மேல்
பித்தையா — சரவண
(முத்தையா)

அனுபல்லவி

அத்தனே அழகனே அறுமுகவனே எந்தன்
சித்தம்யா வும்வைத்தேன் செந்தமிழ் நல்லையுறையும்
(முத்தையா)

சரணம்

வள்ளிதே வகமகளும் வளர்கதிர் வேலதுவும்
புள்ளிமா மயிலதும் புகழ்ச்சேவற் கொடியதும்
வெள்ளைநீ றணிசெய்து விளங்கும் புரிநூலும்
அள்ளி எனை அணைக்கும் ஆனந்தத்தை நான்
[நினைத்தால்
(முத்தையா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் சமயமரபில் வந்தவர் நூல்களுக்கு மதிப்பளிக்குக

—:0:—

## சிவபாதசுந்தரம்பிள்ளை நினைவுவிழாவில் கோரிக்கை

ஷை நினைவுவிழா சைவபரிபாலனசபை ஆதரவில் நாவலர் மண்டபத்தில் 26-7-63 வெள்ளி இரவு 7 மணியளவில் பண்டிதர் பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர் தலைமையில் நடைபெற்றது. தலைவர் பேசும்போது நாவலர் வழியிலே சைவப்பணியாற்றிய சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களின் நினைவு விழாவைக் கொண்டாட வேண்டியது சைவமக்களின் சிறந்த கடமையெனவும் - அப்பெரியார் சைவப்பணிபல செய்துள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் பேசியதாவது; சைவத்திற்கும் தமிழுக்கும் அரும்பணியாற்றிய நாயன்மார்களைப் பின்பற்றி சைவப்பணி புரிந்துவரும் அனைவரையும் பாராட்ட வேண்டியது நமது கடமையாகும். சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் நாவலரின் கொள்கையினை மேற்கொண்டு பணியாற்றியவர் சைவத்திலும் — தமிழிலும மிகுந்த பற்றுடையவர். தனது இறுதிகாலம வரை சைவப்பணிபுரிந்து வந்தார், இலங்கையின் மிகப் புகழ் வாய்ந்த முருகன் ஆலயங்களுள் ஒன்றாகிய கந்தவனப் பதியைத் தனது வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தார், சைவ சித்தாந்தத்தில் பரந்த ஞானமுடையவர். சமயநூல்களை இலகுவில் விளங்கவைக்கும் ஆற்றலுடையவர்,

திருவருட்பயனுக்கு இப்பெரியார் எழுதிய உரை விளக்கம் மிகவும பாராட்டற்குரியது. மாணவர்களுக்கு இலகுவில் விளங்கக்கூடிய முறையில் எழுதியுள்ளார். மேலும் கந்தபுராண விளக்கம், சைவபோதம, திருவாசக மணிகள் போன்ற பல நூல்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். இன்றைய சூழ்நிலையிலே இப்பெரியாரால எழுதப்பட்ட சமய நூல்கள் பாடசாலைகளில காண்பது மிக அருமையான தொன்றாகும்,

புற்றீசல்போலப் பல சமய நூல்கள் வெளிவர ஆரம்பித்துவிட்டன சமய வளர்ச்சிக்கு அச்செயல் பாராட்டற்குரியதே. ஆனல் சைவப் பெரியார்களால்எழுதப்பட்ட சமயநூல்களைப் புறத்தே ஒதுக்கிவிடுவது நியாயமற்றதாகும்.

சைவசமயநூல்களை எழுத ஆரம்பிக்கும் பெரியார்கள் முன்னேரின் அறிவு நிறைந்த நூல்களையும் படிக்கச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். இப்பெரியாரால் உரை எழுதப்பெற்ற "திருவருட்பயன்" என்னும் நூலை மாணவர்கள் அவசியம் படிக்க வேண்டும். சித்தாந்த சாஸ்திரங்களைக் கற்பதற்கு அவ்வுரை சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பதனையாருமமறுக்க முடியாது. சமயகுரவர் வழியிலே நின்று சமயப்பணிபுரியும் பெரியார்களைச் சைவ உலகம் மறந்துவிடாது இருக்க வேண்டும். சைவப்பாடசாலைகள்தோறும் சைவப் பணிபுரிந்த பெரியார்களின் விழா நடைபெற வேண்டும். போதனையோடு சாதனையும்சேர்ந்த சமயக்கல்வியே பயனுடைய கல்வியாகும் என்று குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. எஸ், அம்மையப்பர் சிவபாதசுந்தரம் பிள்ளையவர்களின் சிறந்த பணிகளைப் பாராட்டிப்பேசினர், பாடசாலைகளில் சமயக்கல்வி சிறந்த முறையில் போதிக்கப்பட வேண்டுமானல் நாவலர் பெருமானின் வழிநின்று பணியாற்றிய பெரியார்களால்எழுதப்பட்ட நூல்களைப் பாடசாலைகளில் பாடப்புத்தகமாக அமைக்க வேண்டும், சமய பாடத்திட்டங்களைச் சிறந்த முறையில் அமைத்துக்கொடுக்க சைவ பரிபாலன சபை முயற்சி செய்யவேண்டும்.

### பிடி அரிசி சேர்த்துச் சுந்தரர் குருபூசை

28-7-63 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் வயாவிளான் பலாலி தெற்கு இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் "தம்பிரான் தோழரின்" குருபூசை மானம்பராய்ப் பிள்ளையார் கோவிலில் ஆரம்பமாயது. அவ்வமையம் விக்கினேசுவரருக்கும் பெரியதம்பிரானுக்கும் விசேட பூசைகள் நடந்தன. ஆசிரியர் திரு. சி இராமலிங்கம், ஆசிரியர் திரு. க. க சுப்பிரமணியம் செல்வன் சி. சுப்பிரமணியம் என்போர் முறையே "தம்பிரானும் தோழரும்", சிறுரும் சமயமும்" "சுந்தரர்வாழ்வு' என்னும் விஷயங்கள்பற்றி விரிவுரை ஆற்றினர். அடியார்க்குப் பிரசாதம் வழங்கியதும், குருபூசை நிறைவெய்தியது

### விலைக் குறைவு

நிதிமந்திரி ரி. பி. இலங்கரத்தின கேற்று நடாத்திய வரவு செலவுத் திட்டச் சொற்பொழிவின் போது 1 இருத்தல் மாவின் விலையில் 4 சதமும், 1 இருத்தல் பாண் விலையில் 7 சதமும், குறைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

### அடைவு நகை ஏல விற்பனவு

கோக்குவில் மேற்கு தம்பிப்பிள்ளை பொன்னையாபிள்ளை அவர்களிடம் 3-3-62 தொடக்கம் 31-7-62 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 1963-ம் ஞூ ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி (16-8-63) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்,
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
25-7-63.
M 72, 26, 2-8-63.

நேயர்கள் நெஞ்சம்

### திரை மறைவில் உண்பதுபற்றி......?

ஐயா,

தங்கள் 5-6-63 இந்துசாதன இதழில் "திரைபோட்டு உண்பதை நாவலர்பெருமான் வெறுத்தாரா?" என்னும் கட்டுரை ஒன்றைப் படித்தேன். இக்கட்டுரையில் திரு. வே. கந்தையா அவர்கள் தாம் கொண்டுள்ள கருத்தை விளக்கு முன் முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் திரையிட்டு உண்பது சைவமாகாது என்று ஓர் கூட்டத்தில்பேசியது உண்மைதானே வென்று கேட்டிருந்தார்கள். இவ்விஷயம் சைவர்களாகிய நாம் எல்லாம் அறிந்து கொள்ள வேண்டிய தொன்ருதலின் திரு முதலியார் அவர்களின் விடையை எதிர்பார்த்திருந்தோம். அப்பெரியார் இதுவரை யாதும் மாறாக அறிவிக்காதபடியால்அவர் மேலே குறித்தபடி பேசித் தானிருப்பார் என நம்புகின்றேம். பேசியிருந்ததாக ஏற்றுக்கொண்டு திரு. வே. கந்தையா அவர்கள் தமது விளக்கம் என்னவென்பதை இந்துசாதனம் மூலம் வெளிப்படுத்த வேண்டுகின்றேன்.

திரைமறைவில் உண்பவன்
வண்ணார்பண்ணை.

x x x

### சமய அறிவுப் போட்டி

ஐயா,

கடந்த சில ஆண்டுகளாக "நல்லூர் கந்தசுவாமி கோயிற் சமய அறிவுப் போட்டி ஒன்று மாநகர சபையால் நடாத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு நடந்த போட்டியில் பல வினக்கள் பிழையானவை. சைவ அறிஞர்களிடத்திலே வினக்களையும் விடைகளையும் பெற்றுப் பரிசீலனை பண்ணுகிறர்களாம். பரிசு பெறுபவர்களுடைய தலைவிதி பரிசீலனை பண்ணுவோருடைய தீர்மானத்திலேதான் தங்கியுள்ளதாம். நல்லதுதான். என்ன முறையிலே பரிசீலனை பண்ணுகிறர்களோ?

இப்போட்டியில் தங்கள் விடைகளும் சேர்கின்றனவா? பரிசீலனைபண்ணப்படுகின்றனவா? என்ற சந்தேகம் அபிமானிகளிடையே நிலவியுள்ளது, இதனலே தங்கள் விடைகளைப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டியிருக்கின்றதெனவும் சொல்லிக் கொள்ளுகிறர்கள்,

எனவே, மாநகரசபையிலே கொஞ்சப்பேர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் திருவிழாக் காலத்திலே சமயம் படிப்பதற்காக இதனை வைக்காது நேயர்களின் நம்பிக்கைக்குரிய முறையிலே நடத்துதலே நல்லது என்பதை இதனை நடாத்துவோருக்கும் பரிசீலனை பண்ணும் சைவசித்தாந்திகட்கும் ஞாபகமூட்டுகின்றேம்.

முன்னைநாள் நகரபிதாக்கள் விட்ட பிழைகளைத் தற்போதைய நகரபிதா திருத்தி வைப்பாரெனநம்புகின்றேம்.

[illegible] அபிமானி
சித்தன்கேணி,
26-7-63.

இவ்வாரம் 4-8-63 — 10-8-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தடைகளைத்தாண்டி முயற்சியில் வெற்றிபெற முடியும் நிலபுலங்களால் இலாபம் உண்டாம். தம்பி தங்கையர் உதவுவர். மன அமைதி இருக்காது.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரீடம், 1, 2-ம் பாதம்,

பணமளவில் நல்ல வாரம். புது முயற்சிகள் தடங்கல்படும். ஆனல் வெற்றிபெறும். நண்பர் உறவினரால், இலாபம் உண்டாம். உடல்நிலை ஊறுபடும் வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு.

**மிதுனராசி** மிருகசிரீடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

ஞாயிறு திங்கள் செவ்வாய் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். மிகுதி நாட்கள் ஓரளவு சாதகமானவை வேலை அதிகமாயிருக்கும். ஆனல் போதியளவு ஈடு செய்யப்படுவீர்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

குடும்பநிலை குழப்பலாயிருக்கும். பெரும் கண்டனங்கள் உமக்கு ஏற்படும். செவ்வாய் மாலை புதன் வியாழன் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். மிகுதி நாட்கள் சாதகமானவை.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம். பழம் முதலீடுகள் நல்ல பயனைத்தரும். குடும்பக்கவலைகள் கலகங்கள் உண்டாகலாம். வியாழன் மாலை, வெள்ளி சனி எச்சரிக்கையோடு கழியவேண்டும்,

**கன்னிராசி** உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2 பாதம்.

உடல்நிலை பிரச்சினைக்குரியது. நிம்மதி இருக்காது தொழிலளவில் நல்ல வாரம். புதிய முயற்சிகள் நல்ல வருவாய்தரும். புகழும் சமூக வெற்றியும் உண்டாம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இனத்தவருடன் மோதல் உண்டாம். புதிய முயற்சிகள் தடங்கல்படும். செலவுகள் பெருகும். நண்பர்கள் இக்கட்டிலிருந்து காப்பர். உடல்நிலைக் குழப்பங்கள் உண்டாம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

விவசாய முயற்சிகளில் வெற்றிகள் தொடரும். பண இலாபமும் சமூக வெற்றியும் உண்டாம் தந்தைவழி உறவினர் மிக உதவுவர்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல்நிலைக்குழப்பங்களுக்கு இடமுண்டு. இனத்தவருடன் மோதலுண்டாம நிம்மதி இருக்காது. தொழிலளவில் ஓரளவு நல்ல வாரம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

எதிரிகளுக்கு இன்னல் உண்டாம், விரும்பத்தகாத கண்டனங்கள் ஏற்படும். தந்தைவழி உறவினர் சண்டைக்கு நிற்பர். எதிலும் எச்சரிக்கையோடு நடக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

திரும்பவும் ஒரு நல்லவாரம். தொழில் வெற்றியும் புகழும் நிச்சயம். செலவுகள் பெருகும். உடல்நிலை கவனம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

குடும்பநிலை குழம்பலாயிருக்கும். சிறு உடல்நிலைக் குழப்பமும் உண்டாம். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். இனத்தவருடன் எச்சரிக்கையாகப்புழங்குக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 4592
வட்டுக்கோட்டை அராலிவடக்கு கணபதிப்பிள்ளை செல்லையா
வழக்காளி
எதிராக
வாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு
1. மணியர் கந்தையா கைம்பெண் குஞ்சிப்பிள்ளை
2. செல்லையா ஐயாத்துரை
3. நித்தியானந்தம் கைம்பெண் நல்லம்மா
-எதிராளிகள்
4. ஷை கந்தையா சச்சிதானந்தன்
-கூட்டு எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4592ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் 2 துண்டுக்காணிகளை 1963 ம் ஞூ ஆவணி மீ 24 ம௳ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 3498-75ம் 3-2-62 தொடக்கம் 25-1-63 வரைக்கும் ரூபா 3000-க்கு 11வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 372-12½ ம் (செலவழித்ததொகை ரூ 299-95; வெலியாத்துச் செலவு ரூ 45-47½ ஏற்படக்கூடிய செலவு ரூ26-70)

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "நல்லவராயன் தலைமடையும் நீராவியடியும் குழந்தையன் தறையும் நிலபர 2 குளி 11 இல் நிலபர 1 குளி 5½ ம் கல்வீடும் தெற்கேயிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் இந்த நிலப்பரப்பு ஒன்று குளி ஐந்தரைக்கும் எல்லை கிழக்கு றேட்டு, வடக்கும் மேற்கும் தெற்கும் அப்பையா பேரம்பலத்தினுதனம். இதடங்கலும் வீடும் கிணற்றுப் பங்கும் பயிரும்.

2. ஷை வண்ணார்பண்ணை வடகிழக்கிறை ஆதப்புலம் நிலபர 2½ ம் வீடும் பயிர்வகைகளும் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் இந்த நிலப் பரப்பு இரண்டரைக்கும் எல்லை கிழக்கு றெயில்பாதையும் ஒழுங்கையும் வடக்கு சரவணை தம்புவின் ஆதனமும் காசினுதா செல்லையாவின் உரிமைக்காரரினுதனமும், மேற்கு முருகேசு இராசம்மாவினுதனம், தெற்கு சபாபதிப்பிள்ளை மயிலுவின் ஆதனம். இதடங்கலும் வீடும் கிணற்றுப்பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.

19. வேம்படி வீதி
யாழ்ப்பாணம், 31-8-63.
M, 99 2-8-63,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் கரையூர்
யோசேப் சின்னத்துரை
—வழக்காளி.

இல. MB. 4376

எதிராக

கோப்பாய் இருபாலை
குசும்பபிட்டி ரோட்
1. சின்னையா சிங்காரமும் பெண்
2. இராசமணியும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB. 4376-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும ஒருதுண்டுக் காணியை, 1963-ம் ஹூ ஆவணி மீ 24 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபாய் 13|2-ம் 8-11-61 தொடக்கம் 19-12-62 வரைக்கும் ரூபாய் 1000-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 239-70 சதமும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோயிற்பற்று இருபாலை இறை "கனகராயகு வயல்" நெற்பரப்பு இலா 19½ ஆனால் அளந்துகொண்டபடி நெற்பரப்பு இலா 20-ம் அதைச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு மாரிமுத்து தம்பிமுத்துவின் உரிமைக்காறரின் ஆதனம், வடக்கு கந்தர் சபாபதிகரும், மறுபேருக்கும் உரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை முகப்பு. தெற்கு D. J. தம்பாப்பிள்ளையின் ஆதனம்.

அ. ஜெகநாதன்
கொம்மிஷனர் விலைமதிப்பாளர்.
16 A, அம்மன்ரோட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
M 102 2-8-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யோன் செல்லத்துரை
நம்பர் 10 அடப்பன்ரோட்
கரையூர், யாழ்ப்பாணம்.
—வழக்காளி,

இல, M,B- 4779.

எதிராக

பிலிப்பு மரியாம்பிள்ளை
நாவாந்துறை
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4779-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963 ஹூ ஆவணி மீ 27 உ (27-8-63) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 2517-ம் இதற்கு ரூபா 2000-க்கு 24-4-62 தீர்வைத் திகதி தொடக்கம் 29-11-62வரை 100-க்கு 12 வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 295-87,

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு "பொம்மை வெளி" பரப்பு 11 7/8 குழியும் வீடும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு ஒழுங்கை, மேற்கு மரியான் பெண் அனுசிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு கெபிரியல் யோசெப்பின் ஆதனம். இது அடங்கலும்,

சி. செ. மாரிமுத்து,
கொம்மிசனரும்,
விலைமதிப்பாளரும்.
விதானை வளவு
சித்தன்கேணி, 8-7-63,
M 96. 2-8-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

இல. M,B. 4197

வண்ணார்பண்ணை கிழக்கு
முருகேசு கைம்பெண்
நாகரத்தினம்
—வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி சண்முகம் ஸ்ரோஸ் செலலப்பா சற்குருநாதன் தனது பெற்றார் வேலணை மேற்கு தளையசிங்கம் செல்லப்பாவினதும் பெண் சிவபூரணத்தினதும் சட்டபூர்வமான பிரதிநிதி —எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4197-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1963-ம் ஹூ ஆவணி மீ 20-ம் உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 1873-00 ம் 16-8-61 தொடக்கம் 14-3-62 வரைக்கும் ரூபா 1000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 239-77 (செலவழித்த தொகை ரூபா 175-70; வெலியாத்துச் செலவு ரூபா 35-77; ஏற்படக் கூடிய செலவு ரூபா 28-50).

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை கிழக்கு இறை "நாகன் தோட்டம்" விலபர 22. இதில் மேற்குப்பக்கமா விலபர 14½யும் வீடும், கிணறு பனைகள் தென்னைகள் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு கதிர்காமு கந்தசாமிக்கும் பெண தங்கம்மாவுக்குமுரிய இதன் மிகுதிக்காணி. வடக்கு கதிர்காமன் கைம்பெண் பொன்னிக்குரிய ஆதனங்களும் ஒழுங்கை முகப்பும், சுப்பன் கயிலனுக்கும் வைரமுத்து கந்தையாவுக்கும் நாகமுத்தன் ஐயனுக்குமுரிய ஆதனங்களும், மேற்கு நாகலிங்கம் பொன்னையாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், தெற்கு அம்பலவாணர் கந்தையாவுக்கும் பங்காளருக்கும் மூத்த தம்பி சோமசுந்தரத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள்.

அ. வெற்றிவேலு
கொமிஷனர்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 29-6-63.
M. 98 2-8-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உடுவில், வயிரவி சின்னையா
—வழக்காளி

இல. M,B, 3949.

எதிராக

உடுவில் மடத்தடி
1. கணபதி கதிரன்
2. கதிரன் வீரசிங்கம்
3. கதிரன் தம்பிஐயா
4. கதிரன் நாகரத்தினம்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B. 3949-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1963-மஹூ ஆவணி மீ 24-ம உ (24-8-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 1404-83 ம் இதற்கு இதில் ரூபா 1250-க்கு 8-3-61 தீர்வைத் திகதி தொடக்கம் 4-10-61 திகதி வரை 100-க்கு 10 வீத வட்டியையும், பின் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 200-40 சதம் இதில் 300 ரூபா கோட்டில் கட்டப்பட்டது,

மேலும் செலவு தொகையும் 100 ரூபா கொடுபட்டது.

காணி விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவிலிறை "மிதியன்" நிலப்பரப்பு 12½யும் பனைகளும் வடமேற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வை வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு சின்னட்டி கணபதிக்கும் பெண் நாகமுத்துவுக்கும் வெள்ளையன் பெண் இலட்சுமிக்குமுரிய ஆதனங்களும் இணுவில் ஊரெல்லையும், வடக்கு ஒழுங்கையும் வயிதிலிங்கம் சரவணமுத்துவின் ஆதனமும். மேற்கு ஒழுங்கையும் குறித்த சரவணமுத்துவின் ஆதனமும், தெற்கு நன்னித்தம்பி பெண் வள்ளியப்மையின் ஆதனம். இதில் சொரியலாய் ஆறில் ஒன்றில் எட்டில் ஏழு பங்கும் புதிதாகக் கட்டிய வீடு நீங்தமாகவும்

சி. செ. மாரிமுத்து,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
விதானை வளவு
சித்தன்கேணி
8-7-63.
M 95 2-8-63,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
யாழ்ப்பாணம் கரையூர்
மவுன்ற்காமல் ரோட்டு
எம். செபஸ்ரியாம்பிள்ளை
—வழக்காளி

இல. M.B. 4541.

எதிராக

யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத்தெரு
(1) எம் கனகரெத்தினமும்
(2) மனைவி பரமேஸ்வரியும்
(3) யாழ்ப்பாணம் 91ம் மெயின் வீதி, எஸ். இரத்தினசிங்கம் C/o எஸ். சய்மோன்
(4) கொட்டடி எம். ஆறுமுகம்
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் M B 4541 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1963 ம் ஹூ ஆவணி மீ 29 ந் உ வியாழக்கிழமை (29-8-1963) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 2840ம். இன்னும் ரூபா 2000-க்கு 22-1-62 தொடக்கம் 14-9-62 வரை 12 வீத வட்டியும் கூடிய தொகைக்கு 14-9-62 தொடக்கம் இறுபடும்வரை 5 வீத வட்டியும் செலவு விடப்பட்டது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று யாழ்ப்பாணம் ரவுணைச் சேர்ந்த 3ம் குறுக்குத்தெரு இறை அரியதுரையன் தறையும் பற்றிடக் கொண்டான் குடியிருப்பும் குளி 13 9 தென்னைகளும் இதற்குள் அடங்கிய கொட்டில்களும் செய்பயிர் வான்பயிர்களும் மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும்.எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு தம்பிப்பிள்ளை பெண்ஞானம்மாவுக்குரிய ஆதனமும் குறிக்கப்படும் படத்தில் 5 என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட ஆதனமும். மேற்கு ஜேம்ஸ் பெண் மரியம்மாவுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு எம். துரைசிங்கத்தின் ஆதனம் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும், இன்னும்குறிக்கப்படும் படத்தில் 5 என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட கிணற்றிலும் அதைச் சேர்ந்த நிலத்திலும் இதற்குரிய பங்கும். இவ்வாதனம் 1953 ம் ஆண்டு ஆனி மாதம் 14ந் திகதி சேவையர் எஸ் முத்துக்குமாரசாமி அளந்து போட்ட 189 ம் இலக்கப் படத்தில் 4 என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்டிருக்கிறது.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
45, 4-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 23-7-63.
M 91 2-8-63

## யாழ்ப்பாணம்
# —ஐக்கிய இலாப நிதி—
### 1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சவிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம். 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M B 4768.

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

சண்டிருப்பாய்
1 தம்பிமுத்து நாகலிங்கமும் பெண்
2 பொன்னம்மா

இதில் இரண்டாவது வழக்காளிக்கு நேராகவும் பிரதிகாரனும் ஆவர்.
வழக்காளிகள்

எதிராக

சங்கானை கிழக்கு
1. கார்த்திகேசு சுப்பிரமணியம் கைம்பெண் இரத்தினம்
2. சபாபதி செல்வரத்தினம்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம்டிஸ்திறிககோட்டின் M B 4768 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும இரண்டு துண்டுக் காணியும் 1963ம் ஆண்டு ஆவணி மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமை (31-8-63) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 3570 க்கும் 18-4-62 தொடக்கம் 10-7-62 வரையும் ரூபா 2000க்கும் 12 வீத வட்டியும் அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கொடுக்கும்வரையும் இறுக்க வேண்டும். இதில் கோட்டுச் செலவு ரூபா 221-70 சதம், அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 154-60 சதம். வெலியாத்துச் செலவு ரூபா 42-40 சதம். வரும் செலவு ரூபா 24-70 சதம்.

ஆதன இடாப்பு

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக சங்கானைக் கோயிற்பற்றுசங்கானை இறை "பல்லை அயல்" என்னும் காணி நெற்பர 10. இதில் தென்மேற்குப் பகுதியில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழி வாய்க்காலும் உண்டு எல்லை கிழக்கு கார்த்திகேசு கந்தையாவும் மற்றவர்களும் வடக்கு சபாபதி கைம்பெண் நாகம்மாவும் மற்றவர்களும். மேற்கு இராமலிங்கம் சிவரத்தினம் தெற்கு சபாபதி குழந்தைவேலுவும். வேலு பண்டாரமும். பதிவு இலக்கம் E 289/7.

மேற்படி கூறிய கோயிற்பற்றும் இறையும் சந்தியா தோட்டமும் 'சீமன் கடவை' என்னும் காணி நில பர 3½. இதில் செய்பயிர் வான் பயிரும் வழி வாய்க்காலும். இந்தக்காணிக்குக் கிழக்குப் பக்கத்திலிருந்து மேற்குப்பக்கம்வரை ஒற்றை அடிப் பாதையும். இதில் கிழக்குப் பக்கத்தில் ஒணறும் உண்டு. எல்லை கிழக்கு நாகமணி மனைவி சின்னத்தங்கம் வடக்கு பண்டாரி கைம்பெண் சிவகாமன் அப்புத்துரை மனைவி திருகாமும். மேற்கு குருநாதி மூருகேசு தெற்கு ஆறுமுகம் கணபதிப்பிள்ளையும் மனைவி சின்னக்குட்டியும். பதிவு இலக்கம் E 186/161.

இ கனகரெத்தினம்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
கம்—35 கொழும்புத்துறைவீதி
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
M 93 2-8-63,

உ

## பட்டினத்தடிகள் குருபூசை

நாள்: சோபகிருதுஹூ ஆடிமீ கக உ (4-8-63) ஞாயிற்றுக்கிழமை.

இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

இரவு 7 மணி ஆரம்பம்
கடவுளாராதனை -
தமிழ்மறையோதல்
ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக் குருக்கள் அவர்கள்
விரிவுரை:
"பட்டினத்தடிகள்"
பண்டிதர் பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவரஐயர்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக

மூ. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம் 30-7-63.

## நாமுண்டு நம் தொழில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்ற தாரக மந்திரம் சைவப்புலவர்களின் உள்ளங்களில் நிலைபெற வேண்டும், சைவச்சான்றோரை மதித்துக் கௌரவித்து அவர்கள் தலைமையில் சைவ சமயப்பணியை மேற்கொள்ளுவதே சாலச்சிறந்ததாகும்.

இன்று நம்மைப்பார்க்கிலும் அறிவிலும், ஆற்றலிலும், வயதிலும முதிர்ந்த சைவ பூசணங்களைப் பொன்னுடை போர்த்துக் கௌரவிக்க இருக்கின்றோம். அவர்கள் இருவரும் சைவப்புலவர்களே ஆவர். அன்னார் புரிந்த சைவத்தொண்டினை இச்சிறிய நாவால் எடுத்து இயம்ப எங்ஙனம் முடியும். அவை திருவருட்பாங்கானவை. நாம் அவர் வழி நின்று சமயப்பணியைப் புரிவோமாக.

(அடுத்த இதழில் முடிவுறும்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுணவீதி, 2ம் ஒழுங்கை ... இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 2-8-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org